# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2044/34 - 2017 නොවැම්බර් මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.11.09

*2044/34 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

***மதுவரி அறிவித்தல் இல. 1000***

**மதுபானம் மீதான மதுவரித் தீர்வை**

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு, மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், மங்கள சமரவீர ஆகிய நான், 2017, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் -

(1) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்ற உற்பத்தி நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் வெல்லப்பாகு (மொலாசியஸ்), பனஞ்சாராயம், தென்னை மற்றும் பதனிடப்பட்ட சாராயம் என்பவற்றின் மீது அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு மதுசார செறிம லீற்றருக்கு ரூபா மூவாயிரத்து முன்னூறு (3,300.00 ரூபா) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்படல் வேண்டும் ; எனவும்,

(2) இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற “வெளிநாட்டு” மதுசாரம் மீது அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு வடி நீர்மங்களின் செறிம லீற்றருக்கும் ரூபா மூவாயிரத்து முன்னூறு (3,300.00 ரூபா) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்படல் வேண்டும் எனவும்,

(3) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்ற உற்பத்திச்சாலையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் தானிய வகை மதுசாரம் மீது அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு மதுசார செறிம லீற்றருக்கும் ரூபா இரண்டாயிரத்து நானூறு (2,400.00 ரூபா) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்படல் வேண்டும் எனவும்,

(4) கள்ளு அல்லது வேறு தானியம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் மதுபானம் தவிர்ந்த பனைமரத்தின் இயற்கையான உற்பத்திப் பொருட்கள் அல்லது ஏதேனும் தாவரத்திலிருந்து காய்ச்சி வடித்தல் தவிர்ந்த செயன்முறை மூலம் இலங்கையில் தயாரிக்கப்பட்ட மதுபானத்தின் மீது அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு மதுசார செறிமம் லீற்றர் ஒவ்வொன்றிற்கும் ரூபா இரண்டாயிரத்து நானூறு (2,400.00 ரூபா) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்படுதல் வேண்டும் எனவும்,


1A - PG 3747 — 557 (2017/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(5) அவ்வாறே, மேலே 1 முதல் 4 வரை குறிப்பிடப்பட்டுள்ள மதுபானங்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் போது, அத்தொகை எவ்வளவாயினும், அவற்றின் மீது அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும்,

(6) அத்துடன் மேலே 3 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட மதுபானம், அனுமதிபெற்ற வடிசாலை ஒன்றிலிருந்து இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு இராஜதந்திர தூ தரகத்தின் பாவனைக்காக விநியோகிக்கப்பட்டு அதற்கான கொடுப்பனவு அத்தூ தரகத்தின் வெளிநாட்டுக் கணக்கிலிருந்து செலுத்தப்படுமிடத்து, மேற்குறித்த தீர்வைவிதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும் ; அத்துடன்.

(7) 2015, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதிய 1941/31 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 978, 979 மற்றும் 980 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள் மற்றும் 2014, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதிய 1885/44 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 968 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தல் என்பனவும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும்,

இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2017, நவெம்பர் 09.

11- 1105

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.